# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2358/73 - 2023 නොවැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2023.11.17

*2358/73 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

15(1) ஆம் பிரிவின் கீழான சுவீகரிப்பு கட்டளையினை இரத்துச் செய்தல்

தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் கீழ், அன்றைய பாதுகாப்பு அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களைக் கொண்டு 2011.09.30 ஆந் திகதிய 1725/ 29 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அதிவிசேட வர்த்தமான அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட 15(1) ஆம் பிரிவின் கீழான கட்டளையின் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் மிகவும் தெளிவாக விபரிக்கப்படும் காணித்துண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்பட்டது.

ஆனால், நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதிகார சபைக்குக் குறித்த சொத்து அவசியம் அற்றதென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், தீர்மானிப்பதனால் 2011.09.30 ஆந் திகதிய 1725/ 29 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட மேற்குறித்த 15(1) ஆம் பிரிவின் கீழான கட்டளையினை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
கட்டம் II,
"செத்சிறிபாய",
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 13.

***அட்டவணை***

*மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அடங்கியுள்ளதும் கருவாதோட்ட வட்டாரத்திற்குள் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தினால் 1948.02.18 ஆந் திகதி கருவாதோட்டப் பிரிவினுள் அரச காணி வரைபட இலக்கம் 02 இன் துண்டு இலக்கம் 1 ஆக மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதும் வடக்கு : தர்மபால மாவத்தையையும் (டரட் வீதி) மற்றும் எப். ஆர். சேனாநாயக்க மாவத்தையும் ; கிழக்கு : டாக்டர் சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மாவத்தையும் ; தெற்கு : ஆனந்த குமாரசுவாமி மாவத்தையும் ; மேற்கு : சேர். மார்க்கஸ் பர்னாந்து மாவத்தையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதும் தற்போது பொது நூல் நிலையத்திற்குப் பயன்படுத்தப்படும் இடப்பகுதியும் நினைவுச் சின்னத்திற்கும் அதன் கொண்டாட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடப்பகுதியைத் தவிர்த்தும் பரப்பளவில் அண்ணளவாக 54 (ஐம்பத்திநான்கு) ஏக்கர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டதுமான காணி.*

EOG *11-0190*